# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/16 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26

*2303/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 3/2013* (iii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 ஆம், 321 ஆம் பிரிவுகளின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான
சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 19 .*

**ஒழுங்குவிதிகள்**

*2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(1)* *அதன் 6 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"6. (அ) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்களுக்குச் சமவாயத்தின் அத்தியாயங்கள்* II, III, V *என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேர்ச்சித்திறன் சான்றிதழ்களையும் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சித்திறன் சான்றிதழையும் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-*VI/1 *ஆம் அட்டவணைக்கிணங்க) வழங்குதல் வேண்டும்;*

*(ஆ) ஆணையாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்ட சான்றிதழ்கள் தவிர, சமவாயத்தில் விதித்துரைக்கப்பட்ட தேர்ச்சித்திறன் சான்றிதழ்களை வழங்குவதற்கான தத்துவத்தை ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகத்துக்குக் கையளிக்கலாம்.".*

*(2)* *அதன் 8ஆம் ஒழுங்குவிதியில், அதன் (2) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"(2) தகைமைபெறும் சேவை அல்லது பயிற்சி, சேறுவாரிகள், ஆராய்ச்சிக் கலன்கள், அழிவுமீட்புக் கலன்கள், இழுவைப்படகுகள் போன்ற வர்த்தகஞ்சாராக் கப்பல்களில் மற்றும் ஒத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வேறு கலன்களில் நடாத்தப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய சேவை, இவ்வொழுங்குவிதியின் 19 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளுக்கிணங்கக் கணக்குக்கெடுக்கப்படலாம்.".*

*(3)* *அதன் 9(1)(ஆ) என்னும் ஒழுங்குவிதியில், "3000 மொத்தத் தொன்னுக்குக் குறையாத" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "3000 மொத்தத் தொன்னுக்குக் குறையாத, மற்றும் அவற்றில் கப்பலின்மீதான பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட பதிவேட்டுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்படுகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;*

*(4)* *அதன் 9 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (12) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-*

*"(12) 500 மொத்தத் தொன்னான அல்லது அதற்கு மேற்பட்ட கடலிற்செல்லும் கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலின் பாகமாகவமைகின்ற ஒவ்வொரு கப்பற்றுணையாளரும் முறையாகச் சான்றளிக்கப்பட்டவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் 500 மொத்தத் தொன்னான அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற்போக்குவரத்துக்காவலின் பாகமாகவமைகின்ற கப்பற்றுணையாளராகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும் -*

*(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;*

*(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-*

(i) *பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படவேண்டியதும் 6 மாதங்களுக்குக் குறையாத கப்பலிலான பயிற்சியுட்பட்டதுமான அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லும் சேவையொன்று; அல்லது*

(ii) *இரண்டுமாதங்களுக்குக் குறையாததாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லும் ஒரு காலப்பகுதி உட்பட அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லுமுன்னரான பயிற்சி நிகழ்சித்திட்டமொன்று; அல்லது*

(iii) *இரண்டு மாதங்களுக்குக் குறையாததாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லும் ஒரு காலப்பகுதியுட்பட கப்பலின்மீதான விசேட பயிற்சி:*

*ஆயின், உட்பந்திகள்* (i), (ii) *மற்றும்* (iii) *என்பவற்றினால் தேவைப்படுத்தப்பட்ட கடலிற்செல்லும் சேவை, பயிற்சி மற்றும் அனுபவம், கடற்போக்குவரத்துக் காவல் காத்தற் பணிகளுடன் இணைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் கப்பற்றலைவர், கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது தகைமைபெற்றவொரு கப்பற்றுணையாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் நிறைவேற்றப்பட்ட கடமைகளின் புரிகையை உட்படுத்துதலும் வேண்டும்;*

*(இ) (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-*VI/ *1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-*VI/*1-2 ஆம் அட்டவணைக்கிணங்க) தீத்தடுப்பு மற்றும் தீயெதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-*VI/*1-3 ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-*VI/*1-4 ஆம்*

அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட காப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கள் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2 ஆம் அட்டவணைக்கிணங்க) பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தமை பற்றிய ஆவணச்சான்றைக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-II/4 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்திருத்தல் வேண்டும்.

(5) அதன் 9(13)(இ) என்னும் ஒழுங்குவிதியில், அதன் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ii) 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்"; அத்துடன்

(6) அதன் 9(13) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(உ) எஸ்ரிசிடபிள்யூகோவையின் ஏ-II/ 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.".

(7) அதன் 11(1) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஈ) எஸ்ரிசிடபிள்யு கோவையின் ஏ-III/1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.";

(8) அதன் 11(5) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) இரண்டாவது பொறியியல் அலுவலராகத் தகுதிச் சான்றிதழுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

ஆயின்,-

(i) முறையே மோட்டார்க் கப்பல்களில் அல்லது நீராவிக் கப்பல்களில் மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்துள்ளாரா என்பதைப் பொறுத்து மோட்டார்க் கப்பல்களுக்கு அல்லது நீராவிக் கப்பல்களுக்கு ஏற்புடையற்பாலதாகின்றவாறு தகுதிச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படலாம்; அத்துடன்

(ii) மோட்டார்க் கப்பல்கள் மற்றும் நீராவிக் கப்பல்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பட்ட கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்திருந்தால், மோட்டார்க் கப்பல்களுக்கும் நீராவிக் கப்பல்களுக்கும் ஏற்புடையற்பாலதாகின்றவாறு இணைந்த தகுதிச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படலாம்.".

(9) அதன் 11 (6) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) தோதானவாறு பிரதம பொறியியல் அலுவலராகத் தகுதிச் சான்றிதழுக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

ஆயின், பிரதம பொறியியல் அலுவலராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்று பின்வருவனவற்றுக்கு ஏற்புடையற்பாலதாக வழங்கப்படலாம்:-

(i) மோட்டார்க் கப்பல்கள்; மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையானது ஒரு மோட்டார்க் கப்பலின் பிரதான உந்துதல் பொறியில் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி, ஒரு நீராவிக்கப்பலின் அல்லது மோட்டார்க் கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் உள்ள எந்திரத்தொகுதியின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் ஆற்றப்பட்டிருக்கக்கூடியபோது;

(ii) நீராவிக் கப்பல்கள்; மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையானது நீராவிக் கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியிலும் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி ஒரு நீராவிக்கப்பலின் அல்லது மோட்டார்க் கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் உள்ள எந்திரத்தொகுதியின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் ஆற்றப்பட்டிருக்கக்கூடியபோது; அல்லது

(iii) இணைந்த மோட்டார் மற்றும் நீராவிக் கப்பல்கள்; நீராவிக்கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியிலும் ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை ஆற்றப்பட்டிருந்து மோட்டார்க் கப்பல் ஒன்றின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை ஆற்றப்பட்டிருக்கும்போது.".

(10) அதன் 11(7) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) கரையோரத்தை அண்மித்த கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு ஏற்புடையற்பாலதாக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

ஆயின், நீராவிக் கொதிகலன்களின் தொழிற்பாட்டுக்கும் பராமரிப்புக்குமான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்திராத ஒரு பொறியியல் அலுவலருக்குத் தகுதிச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படலாம். இத்தகுதிச் சான்றிதழானது பொறியியல் அலுவலர் தேவையான தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்றவரையில், எக்கப்பலின் நீராவிக் கொதிகலன்கள் கப்பல் எந்திரத்தொகுதியின் பாகமாக அமைகின்றனவோ அக்கப்பலிலான சேவைக்குச் செல்லுபடியுடையதாதல் ஆகாது.'.

(11) அதன் 11(8) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) கரையோரத்தை அண்மித்த கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியையுடைய கப்பல்களில் பிரதம பொறியியல் அலுவலர்களுக்கும் இரண்டாவது பொறியியல் அலுவலர்களுக்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.'.

(12) அதன் 11(9) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) கரையோரத்தை அண்மித்த கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தியையுடைய கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பிரதம பொறியியல் அலுவலர்களாகத் தகுதிச் சான்றிதழுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.'.

(13) அதன் 11 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (11) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(11) ஓர் எந்திர அறைக் காவலின் பாகமாக அமைகின்ற அல்லது 750 கிலோவோற் அல்லது அதற்குமேற்பட்ட உந்துதல் சக்தியைக் கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடலிற்செல்லும் கப்பலொன்றின்மீது காலாகால ஆளில்லா எந்திர அறையில் கடமைகளைப் புரிவதற்குப் பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வொரு கப்பற்றுணையாளரும்

உரியமுறையில் சான்றளிக்கப்பட்டவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக் கொண்ட கப்பல்களின்மீது ஒரு பொறியியற் காவலின் பாகமாகவமைகின்ற கப்பற்றுணையாளராகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) சான்றிதழை வழங்குவதற்கான பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராக இருத்தலாகாது;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-

(i) எந்திர அறைக் காவல் காத்தல் பணிகளுடன் இணைந்ததும், ஆறுமாதங்களுக்குக் குறையாத கப்பலிலான பயிற்சியும் அனுபவமும் உட்பட்டதுமான அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லும் சேவை; இதில் பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ii) கடலிற்செல்லும் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியொன்றுட்பட, கீழே குறிப்பிடப்பட்டவாறாகக் கடலிற்செல்லுமுன்னரான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; இது இரண்டுமாதங்களுக்குக் குறைவாகவிருத்தலாகாதென்பதுடன் எந்திர அறைக் காவல் காத்தற் பணியுடன் இது இணைந்திருத்தலும் வேண்டும்:-

(அ) ஓர் எந்திர அறைக் காவலின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி; அல்லது

(ஆ) கடல்சார் பொறியியலில் பட்டம், திப்புளோமா அல்லது சான்றிதழுக்கான கல்விசார் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருத்தல்; இது, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் அட்டவணை ஏ-III/4 இல் குறித்துரைக்கப்பட்ட எந்திர அறைக் காவலின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர்களின் குறைந்தபட்ச அறிவு, புரிந்துணர்வு மற்றும் தேர்ச்சித்திறன் என்பவற்றை மேவுதல் வேண்டும்; அல்லது

(iii) நான்கு மாதங்களுக்குக் குறையாததாகவிருக்கவேண்டிய கடலிற்செல்லும் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியொன்றுட்பட, கீழே குறிப்பிடப்பட்டவாறாகக் கடலிற்செல்லுமுன்னரான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்; இதில் எந்திர அறைக் காவல் காத்தற் பணிகளின் ஆகக்குறைந்தது இரண்டுமாதங்களேனும் கம்பெனிக் கடலிற்செல்லும் சேவைச் சான்றிதழில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தின்மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்;

பொறிமுறை அல்லது மின்சார அல்லது தன்னியக்க அல்லது ஓர் இயைபான பொறியியற்றுறையில் ஒரு பட்டம் அல்லது திப்புளோமா அல்லது சான்றிதழுக்கான கல்விசார் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருத்தல்:

ஆயின், உட்பந்திகள் (i), (ii) மற்றும் (iii) என்பவற்றினால் தேவைப்படுத்தப்பட்ட கடலிற்செல்லும் சேவை, பயிற்சி மற்றும் அனுபவம், எந்திர அறைக் காவல்காத்தற் பணிகளுடன் இணைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் ஒரு தகைமைபெற்ற பொறியியலாளர் அல்லது ஒரு தகைமைபெற்ற கப்பற்றுணையாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் நிறைவேற்றப்பட்ட கடமைகளின் புரிகையை உட்படுத்துதலும் வேண்டும்;

(இ) ஓர் எந்திர அறையின் பாகமாகவமைகின்ற கப்பற்றுணையாளராகச் சான்றிதழின் வழங்குகைக்காக, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2 ஆம் அட்டவணைக்கிணங்க) தீத்தடுப்பு மற்றும் தீயெதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட காப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கள் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2 ஆம் அட்டவணைக்கிணங்க) பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தமை பற்றிய ஆவணச்சான்றைக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-III/4 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்திருத்தல் வேண்டும்.

(14) அதன் 11(12) ஆம் ஒழுங்குவிதியில், அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.'.

(15) அதன் ஒழுங்குவிதி 12 (1) இல், அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும்; அதாவது, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 பிரிவு ஏ-VI/1 என்பதற்கிணங்க) அடிப்படைப் பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப்படகுகள் தவிர்ந்த உயிர்வாழ்வு வள்ளங்களிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) உயர்தரத் தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி மற்றும் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்.';

(16) அதன் 12 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (2) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(2) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடலிற்செல்லும் கப்பலொன்றின்மீது சேவையாற்றுகின்ற ஒவ்வொரு மின்சார" தொழினுட்பக் கப்பற்றுணையாளரும் உரியமுறையில் சான்றளிக்கப்பட்டவராதல் வேண்டும். அத்தகைய சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) பரீட்சை தொடங்கும் தேதியன்று பதினெட்டு வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) இயைபானவொரு பதவியில் பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாத பயிற்சி மற்றும் அனுபவமுட்பட அங்கீகரிக்கப்பட்ட கடலிற்செல்லும் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; இதில் பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) (i) கடலிற்செல்லும் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியுட்பட அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; இது, இயைபானவொரு பதவியில் 6 மாதங்களுக்குக் குறையாமலிருத்தல் வேண்டும்; இதில் கப்பலின்மீதான பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ii) அட்டவணை ஏ-III/7 இலுள்ள தொழினுட்பத் தகுதிகளைத் திருப்திசெய்கின்ற தகைமைகளையும் கடலிற்செல்லும் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட காலப்பகுதியொன்றையும் பெற்றுக்கொண்டவராகவிருத்தல் வேண்டும்; இது, இயைபானவொரு பதவியில் 3 மாதங்களுக்குக் குறையாமலிருத்தல் வேண்டுமென்பதுடன் கம்பெனிக் கடல்செல் சேவைச் சான்றிதழில் இது அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-2 ஆம் அட்டவணைக்கிணங்க) தீத்தடுப்பு மற்றும் தீயெதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூகோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட காப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கள் அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-2 ஆம் அட்டவணைக்கிணங்க) பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தமை பற்றிய ஆவணச்சான்றைக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-III/7 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்திருத்தல் வேண்டும்.

(17) அதன் 14 ஆம் ஒழுங்குவிதியில் (5) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிடுவதன்மூலமும்.

(18) அதன் பாகம் VIII இன் தலைப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

**"குறித்தசில வகையினவான கப்பல்களில் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் மற்றும் வேறு ஆளணியினரின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான குறைந்தபட்சக் கட்டாயத் தேவைப்பாடுகள்."**

(19) அதன் 15 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை இடுவதன்மூலமும்:-

"15. (1) சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள பயணிக் கப்பல்களில் கப்பற்றளக் கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்குமுன்னர், கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் மற்றும் வேறு ஆளணியினர்

என்போர், அவர்களின் பதவி, கடமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிணங்க (2), (3), (4), (5) மற்றும் (6) ஆகிய பந்திகளினால் தேவைப்படுத்தப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(2) பயணிக் கப்பல்களில் சேவையாற்றுகின்ற கப்பற்றலைவர்களும், அலுவலர்களும், கப்பற்றுணையாளர்களும் மற்றும் வேறு ஆளணியினரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 1, ஏ-VI/1 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்தல் வேண்டும்.

(3) பயணிக் கப்பல்களின்மீது பயணி இடங்களில் பயணிகளுக்கு நேரடிச் சேவையை வழங்குகின்ற ஆளணியினர் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2, ஏ-V/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காப்புப் பயிற்சியைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(4) அத்தியாயங்கள் II, III, மற்றும் VII என்பவற்றுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றலைவர்களும், அலுவலர்களும், கப்பற்றுணையாளர்களும் மற்றும் பயணிக் கப்பல்களின்மீது அவசரநிலைமைகளில் பயணிகளுக்கு உதவிபுரிவதற்குக் கடமை நிரலில் பெயர்குறிக்கப்பட்ட வேறு ஆளணியினரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 3 ஆம் பந்தி, பிரிவு ஏ-V/2 இல் குறித்துரைக்கப்பட்ட பயணிக் கப்பல் சனக்கும்பல் முகாமைப் பயிற்சியைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(5) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம கப்பற்றுணைத்தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் பயணிக் கப்பல்களின்மீது அவசரநிலைமைகளில் பயணிகளின் காப்புக்கான பொறுப்பைக் கொண்டவரெனக் கடமை நிரலில் பெயர்குறிக்கப்பட்ட எவரேனுமாள், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 4 ஆம் பந்தி, ஏ-V/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நெருக்கடிநிலை முகாமை மற்றும் மனித நடத்தையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(6) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம கப்பற்றுணைத்தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் பயணிகளை ஏற்றுதலுக்காகவும் இறக்குதலுக்காகவும், கப்பற்சரக்கை ஏற்றுவதற்காகவும், தரையிறக்குவதற்காகவும் அல்லது பாதுகாப்பதற்காகவும், அல்லது றோ - றோ பயணிக் கப்பல்களின்மீதான வாயில் துவாரங்களை மூடிவிடுவதற்காகவும் உடனடிப் பொறுப்பு குறித்தளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 5 ஆம் பந்தி, ஏ-V/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாகப் பயணிக் காப்பு, கப்பற்சரக்குக் காப்பு மற்றும் வாயிற் பாதுகாப்பு என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

15அ. (1) முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களின்மீது கப்பற்றளக் கடமைகள் குறித்தளிக்கப்படு முன்னர் கடற்போக்குவரத்துக் காவலொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள கப்பற்றலைவர்களும், பிரதம கப்பற்றுணைத்தலைவர்களும், அலுவலர்களும், முனைவு நீர்ப்பரப்பொன்றில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்காக அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும் முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்; அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1 ஆம் பந்தி, ஏ-V4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்தல் வேண்டும்.

(2) முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களின் மீதான கப்பற்றலைவர்களும் பிரதம கப்பற்றுணைத்தலைவர்களும் முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்காக உயர்தரப் பயிற்சியில் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உபஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியிலான சான்றளித்தலுக்கான தேவைப்பாட்டைத் திருப்திசெய்தல் வேண்டும்;

(ஆ) முனைவு நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு சமமான அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையினுள், முகாமை மட்டத்தில் அல்லது தொழிற்பாட்டு மட்டத்தில் காவல்காத்தல் கடமைகளைப் புரிகையில், கப்பற்றளப் பகுதியில் ஆகக்குறைந்தது இரண்டு (2) மாதகால அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையையேனும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2 ஆம் பந்தி, ஏ-V/4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்தலும் வேண்டும்.

15ஆ. (1) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களில் கப்பற்றளக் கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்குமுன்னர், கடலோடிகள், அவர்களின் பதவி, கடமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிணங்க உபஒழுங்குவிதிகள் (2), (3) மற்றும் (4) என்பவற்றினால் தேவைப்படுத்தப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(2) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களின்மீது சேவையாற்றுகின்ற எல்லாக் கடலோடிகளும், கப்பற்றளக் கடமைகள் அவர்களுக்குக் குறித்தளிக்கப்படுமுன்னர், 31 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு தோதான கப்பல் மற்றும் சாதனம் பற்றிக் குறித்த பரிச்சயப்படுத்துகையைப் பெறுதல் வேண்டும்.

(3) ஐஜீஎவ் கோவைக்கமைந்த எரிபொருளைக் கொண்டுள்ள கப்பல்களின் பராமரிப்பு, பாவனை அல்லது அவசரகாலப் பதிலிறுப்புடன் இணைந்த பெயர்குறிக்கப்பட்ட காப்புக் கடமைகளுக்காகப் பொறுப்புள்ள கடலோடிகள், ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களின்மீதான சேவைக்காக அடிப்படைப் பயிற்சியிலான சான்றிதழொன்றை வைத்திருத்தல்வேண்டுமென்பதுடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 1, ஏ - V/3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

(4) திரவப்படுத்தப்பட்ட வாயுத் தாங்கிக்கப்பல்களின்மீது ஒழுங்குவிதி V/1-2, பந்திகள் 2 மற்றும் 5, அல்லது ஒழுங்குவிதி V/1-2, பந்திகள் 4 மற்றும் 5 என்பவற்றுக்கிணங்கத் தகைமைபெற்று சான்றளிக்கப்பட்டுள்ள ஐஜீஎவ் கோவைக்கமைந்த எரிபொருளைக் கொண்டுள்ள கப்பல்களின் பராமரிப்பு, பாவனை அல்லது அவசரகாலப் பதிலிறுப்புடன் இணைந்த பெயர்குறிக்கப்பட்ட காப்புக் கடமைகளுக்காகப் பொறுப்புள்ள கடலோடிகள், ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களுக்கான சேவைக்காக அடிப்படைப் பயிற்சிக்காகப் பிரிவு ஏ-V/3, பந்தி 1 இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளவர்களெனக் கருதப்படுவர்.

(5) (அ) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களில் எரிபொருட்களினதும் எரிபொருள் முறைமைகளினதும் பராமரிப்புக்காகவும் பாவனைக்காகவும் உடனடிப் பொறுப்புள்ள கப்பற்றலைவர்கள், பொறியியல் அலுவலர்கள் மற்றும் எல்லா ஆளணியினரும் ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களிலான சேவைக்காக உயர்தரப் பயிற்சியில் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களிலான சேவைக்காக உயர்தரப் பயிற்சியிலான சான்றிதழொன்றுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும், உட்பந்தி 15ஆ (3)இல் விதித்துரைக்கப்பட்ட தேர்ச்சித்திறனிலான சான்றிதழொன்றை வைத்திருக்கும் அதேவேளையில்:

(i) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களின்மீதான சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தலும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-V/3, பந்தி 2 இல் குறித்துரைக்கப்பட்டவாறான தகுதி நியமத்தைத் திருப்திசெய்தலும் வேண்டும்; அத்துடன்

(ii) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பற்றளங்களில் குறைந்தபட்சம் மூன்று காப்பறைத் தொழிற்பாடுகளை உள்ளடக்குகின்ற ஆகக்குறைந்தது ஒருமாதகால அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையேனும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும். மூன்று காப்பறைத் தொழிற்பாடுகளுள் இரண்டு, மேலே உட்பந்தி (i) இலான பயிற்சியின் பாகமாகக் காப்பறைத் தொழிற்பாடுகளின்மீதான அங்கீகரிக்கப்பட்ட தூண்டற் பயிற்சிமூலம் மாற்றீடு செய்யப்படலாம்.

(இ) கப்பற்றலைவர்களும் பொறியியல் அலுவலர்களும் மற்றும்திரவப்படுத்தப்பட்ட வாயுத்தாங்கிக்கப்பல்களின்மீதான சேவைக்காகப் பிரிவு ஏ-V/1-2, பந்தி 2 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமங்களுக்கிணங்கத் தகைமைபெற்று சான்றளிக்கப்பட்டுள்ளவர்களான ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களின் பராமரிப்புக்காகவும் அவற்றின்மீது எரிபொருட்களின் பாவனைக்காகவும் உடனடிப் பொறுப்புள்ளவரான எவரேனுமாளும், ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்களுக்கான உயர்தரப் பயிற்சிக்காகப் பிரிவு ஏ- V/3, பந்தி 2 இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திசெய்துள்ளனரெனக் கருதப்படுவர்:

ஆயின், அவர்கள் -

(i) 15ஆ (3) ஆம் பந்தியின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்திருத்தலும் வேண்டும்;

(ii) மேலே பந்தி 15ஆ (5)(ஆ)(ii) இன் காப்பறைத் தேவைப் பாடுகளைத் திருப்திசெய்திருத்தலும் வேண்டும் அல்லது திரவப்படுத்தப்பட்ட வாயுத் தாங்கிக்கப்பலின் தளத்தின்மீது மூன்று கப்பற்சரக்குத் தொழிற்பாடுகளை நடாத்துவதில் பங்குபற்றியிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(iii) பின்வரும் கப்பல்களில் கப்பற்றளத்தில் முன்னைய ஐந்தாண்டுகளில் மூன்று மாதங்களைக்கொண்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்:

(அ) ஐஜீஎவ் கோவைக்கமைந்த கப்பல்கள்;
(ஆ) ஐஜீஎவ் கோவையினால் மேவப்பட்ட எரிபொருட்களைக் கப்பற்சரக்காக ஏற்றிச்செல்கின்ற தாங்கிக்கப்பல்கள்; அல்லது

(இ) எரிபொருளாக வாயுக்களை அல்லது குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருளைப் பயன்படு-த்துகின்ற கப்பல்கள்.'.

(20) அதன் 19(2) ஆம் ஒழுங்குவிதியில் "கப்பலில் ஆற்றிய மொத்தச் சேவைக் காலப்பகுதியின் மூன்றில் இரண்டு பங்கு கடலில் உண்மையாகச் செவழித்த நேரமாக அமையுமானால் அல்லது அதனை விஞ்சுமானால், பூரணமாகக் கணக்குக்கெடுக்கப்படலாம். இந்த விகிதாசாரத்திற்குக் குறைவாக உண்மையாகக் கடல்செல் சேவை அமையுமானால் உண்மையான கடல்செல் சேவையின் ஒன்றரை மடங்குகள் 'தகைமையளிக்கும் கடல்செல் சேவையாகக்" கணக்கிடப்படலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக" கப்பலில் ஆற்றிய மொத்தச் சேவைக் காலப்பகுதியின் மூன்றில் இரண்டு பங்கு கடலில் உண்மையாகச் செலவழித்த நேரமாக அமையுமானால் அல்லது அதனை விஞ்சுமானால், தேவைப்பட்ட கடல்செல் சேவையின் அரைவாசியில் கணக்கிடப்படலாம். இந்த விகிதாசாரத்திற்குக் குறைவாக உண்மையான கடல்செல் சேவை அமையுமானால் உண்மையான கடல்செல் சேவையின் ஒன்றரை மடங்குகள் "தேவைப்பட்ட தகைமையளிக்கும் கடல்செல் சேவையின் அரைவாசியாகக்" கணக்கிடப்படலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(21) அதன் ஒழுங்குவிதி 22(2) இல், "தகவுபற்றிய அறிவித்தலொன்று வழங்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக" தகவுபற்றிய கடிதமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(22) அதன் 22 ஆம் ஒழுங்குவிதியில், உபஒழுங்குவிதி (6)றை உடனடுத்துப் பின்வரும் புதிய உபஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(7) உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவுபற்றிய கடிதத்தின் செல்லுபடிக் காலப்பகுதி, வழங்குகைத் தேதியிலிருந்து 5 ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(8) இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தகுதிச் சான்றிதழொன்றுக்கு அல்லது தேர்ச்சித்திறன் சான்றிதழொன்றுக்கு இட்டுச்செல்கின்ற வாய்மொழிமூலமான மதிப்பீடு உட்பட்ட எல்லாப் பரீட்சைகளும் தகவுபற்றிய கடிதத்தின் செல்லுபடிக் காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.'.

(23) அதன் 26 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"26. (1) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் 1/11 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் (சான்றிதழ்களை மீளச்செல்லுபடியாக்குதல்) தேவைப்படுத்தப்பட்டவாறு தகுதிகள் பற்றிய எல்லாச் சான்றிதழ்களுக்காகவும் தொடர்ச்சியான உயர்தொழில்சார் தகுதியொன்று பின்வருவனவற்றின்மூலம் நிலைநாட்டப்படுதல் வேண்டும்:-

(அ) (i) முற்போந்த ஐந்தாண்டுகளின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதக்காலப்பகுதியொன்றுக்கு, அல்லது

(ii) மீளச்செல்லுபடியாக்குவதற்கு நேர்முன்னரான ஆறுமாதங்களின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது மூன்று மாதக்காலப்பகுதியொன்றுக்கு,

இயைபான பதவிவரிசையில் வைத்திருக்கப்படும் தகுதிச் சான்றிதழுக்குத் தோதான பணிகளைப் புரிந்து, அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அல்லது

(ஆ) பந்தி (அ) (i) இல் தேவைப்படுத்தப்பட்ட கடல்செல் சேவைக்குச் சமமானதெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்பட்ட பணிகளைப் புரிந்திருத்தல்; அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சிப்பொன்றில் சித்தியடைதல்; அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியை அல்லது பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்; அல்லது

(உ) மிகையான பதவியொன்றில் மூன்றுமாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு, வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான பணிகளைப் புரிந்து, அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்.

(2) ஒரு சான்றிதழை மீளச்செல்லுபடியாக்குவதற்கான விண்ணப்பம் ஆறுமாதங்களினுள் செய்யப்படின், சான்றிதழானது செல்லுபடித் தேதியின் ஐந்தாவது ஆண்டுநிறைவுவரை மீளச்செல்லுபடியாக்கப்படலாம். விண்ணப்பமானது மேலே குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் செய்யப்படின், சான்றிதழானது உடனடி விடுவிப்பிலிருந்து ஐந்தாண்டுகளுக்காக மீளச்செல்லுபடியாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்குப்பின்னர் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த விண்ணப்பகாரர்களுக்காகச் சான்றிதழ் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு மீளச்செல்லுபடியாக்கப்படுதலும் வேண்டும்.

(3) (அ) உபஒழுங்குவிதி (1) இன் பந்தி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட பயிற்சிநெறி, கடலில் உயிர்காப்பு, பாதுகாப்பு மற்றும் கடல்சார் சூழலைப் பாதுகாத்தல் சம்பந்தமாக இயைபான தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளிலான மாற்றங்களை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் சம்பந்தப்பட்ட தகுதி நியமத்தின் ஏதேனும் நாளதுவரையாக்குகையைக் கணக்கிற்கெடுத்தலும் வேண்டும்; அத்துடன் அது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) உபஒழுங்குவிதி (1) இன் பந்தி (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பயிற்சிநெறிக்கு உட்படுவதற்கான குறைந்தபட்சத் தேவைப்பாடு, கடந்த பத்தாண்டுகளினுள் வைத்திருக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுக்குத் தோதான கடல்செல் சேவையின் குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதங்களாதல் வேண்டும்.

(இ) உபஒழுங்குவிதி (3)றின் உட்பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாட்டைக் கொண்டிராத கடலோடியொருவர், வைத்திருக்கப்படும் தகுதிச் சான்றிதழுக்குத் தோதாக, இயைபான எழுத்திலான மற்றும் வாய்மொழிமூலமான பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

(4) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி 1/11, பந்தி 3 இன்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு தாங்கிக்கப்பல்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழிற்சார் தகுதியானது பின்வருவனவற்றினால் நிலைநாட்டப்படுதல் வேண்டும்:-

(அ) மீளச்செல்லுபடியாக்குதல் விண்ணப்பம் செய்யப்படும் தேதியிலிருந்து முற்போந்த ஐந்தாண்டுகளின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது மூன்றுமாதக்காலப்பகுதிக்கேனும் வைத்திருக்கப்படும் தாங்கிக்கப்பல் சான்றிதழுக்கு அல்லது புறக்குறிப்புக்குத் தோதான கடமைகளைப் புரிந்து, அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட இயைபான பயிற்சிநெறியை அல்லது பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

(5) ஒழுங்குவிதி 1/11 இன்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பற்றளங்களின்மீதுள்ள கப்பற்றலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழில்சார் தகுதியானது பின்வருவனவற்றினால் நிலைநாட்டப்படுதல் வேண்டும்:-

(அ) மீளச்செல்லுபடியாக்குதல் விண்ணப்பம் செய்யப்படும் தேதியிலிருந்து முற்போந்த ஐந்தாண்டுகளின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது இரண்டு மாதக்காலப்பகுதிக்கேனும், வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான பணிகளைப் புரிந்து, அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அல்லது

(ஆ) பந்தி (4) அ இல் தேவைப்படுத்தப்பட்ட கடல்செல் சேவைக்குச் சமமானதெனக் கருதப்பட்ட பணிகளைப் புரிந்திருத்தல்; அல்லது

(இ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சிப்பில் சித்தியடைதல்; அல்லது

(ஈ) ஒழுங்குவிதி 15அ வின் (1) ஆம், (2) ஆம் உபஒழுங்குவிதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியை அல்லது பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

(6) ஐஜீஎவ் கோவையின்கீழ் அடிப்படைப் பயிற்சியில் அல்லது உயர்தரப் பயிற்சியில் தேர்ச்சித்திறன் சான்றிதழ்களை வைத்திருக்கின்ற கடலோடிகள், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலஇடைவெளிகளில், தோதான புத்தொளிப் பயிற்சியைப் பொறுப்பேற்றல் வேண்டும் அல்லது மீளச்செல்லுபடியாக்குதல் விண்ணப்பம் எத்தேதியன்று செய்யப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து முன்னைய ஐந்தாண்டுகளினுள் ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்கேனும் தேவைப்படுத்தப்பட்டவாறான தகுதி நியமத்தை எய்தியுள்ளார் என்பதுபற்றிய சான்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) பயணிக் கப்பல்களின் அங்கீகரிக்கப்பட்ட சனக்கும்பல் முகாமைப் பயிற்சி, நெருக்கடி முகாமை மற்றும் மனித நடத்தை அல்லது பயணிக் காப்பு, கப்பற்சரக்குக் காப்பு மற்றும் வாயிற் பாதுகாப்பு என்பவற்றுக்கிணங்கப் பயிற்சியளிக்கப்பட்டவர்களும்

பயணிக் கப்பல்களின்மீதுள்ளவர்களுமான கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் மற்றும் வேறு ஆளணியினர், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலஇடைவெளிகளில், தோதான புத்தொளிப் பயிற்சியைப் பொறுப்பேற்றல் வேண்டும் அல்லது மீளச்செல்லுபடியாக்குதல் விண்ணப்பம் எத்தேதியன்று செய்யப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து முன்னைய ஐந்தாண்டுகளினுள் ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்கேனும் தேவைப்படுத்தப்பட்டவாறான தகுதி நியமத்தை எய்தியுள்ளனர் என்பதுபற்றிய சான்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) (அ) எஸ்ரிசிடபிள்யு ஒழுங்குவிதிகள் II/4 (கோவையின் அட்டவணை ஏ-II/4 இற்கிணங்க), II/5 (கோவையின் அட்டவணை ஏ-II/5 இற்கிணங்க), III/4 (கோவையின் அட்டவணை ஏ-III/4 இற்கிணங்க), III/5 (கோவையின் அட்டவணை ஏ-III/5 இற்கிணங்க) மற்றும் III/7 (கோவையின் அட்டவணை ஏ-III/7 இற்கிணங்க) என்பவற்றின்கீழ் வழங்கப்பட்ட தேர்ச்சித்திறன் சான்றிதழ்களின் செல்லுபடியாந்தன்மை, வழங்குகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) உப ஒழுங்கு விதி (8) (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தேர்ச்சித்திறன் சான்றிதழ்களை மீளச்செல்லுபடியாக்கு வதற்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(i) முற்போந்த ஐந்தாண்டுகளின்போது ஆகக்குறைந்தது மொத்தத்தில் மூன்றுமாதக் காலப்பகுதிக்கேனும், வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான கடமைகளைப் புரிந்து, அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை பற்றிய ஆவணமுறையான சான்றைக் காண்பித்தல் வேண்டும்;

(ii) தோதான அங்கீகரிக்கப்பட்ட புத்தொளி மற்றும் நாளதுவரையாக்குகைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சிப்பொன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) புதிய சான்றிதழானது, விண்ணப்பத் தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.”.

(24) அதன் 28 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (3) ஆம் உபஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

“(3) (அ) (கீழே (6) ஆம், (7) ஆம் உபஒழுங்குவிதிகள் நீங்கலாக) உபஒழுங்குவிதிகள் (4) முதல் (12) வரையான வற்றுக்கிணங்கத் தகைமைபெற்ற கடலோடிகள் அங்கீகரிக்கப்பட்ட புத்தொளி மற்றும் தரமுயர்த்துகைப் பயிற்சிநெறிக்கு உட்படுமாறு ஒவ்வோர் ஐந்து ஆண்டுகளும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட புத்தொளி மற்றும் தரமுயர்த்துகைப் பயிற்சிநெறிக்கு உட்படுவதற்கான குறைந்தபட்சத் தேவைப்பாடு, மீளச்செல்லுபடியாக்குதல் விண்ணப்பம் எத்தேதியன்று செய்யப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து முற்போந்த ஐந்தாண்டுகளின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது மூன்றுமாதங்களாக வேனும் இருத்தல் வேண்டும்.

(இ) உபஒழுங்குவிதி (3)இன் பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாட்டைக் கொண்டிராத கடலோடியொருவர், முழுநேர இயைபான பயிற்சிநெறிக்கு உட்படுதல் வேண்டும்.”.

(25) அதன் ஒழுங்குவிதி 36 இல், (2) ஆம் உபஒழுங்குவிதியை அதன் 2(அ) என்னும் உபஒழுங்குவிதியாக மீளஇலக்கமிடுவதன் மூலமும்;

(26) அதன் ஒழுங்குவிதி 36 இல், மீளஇலக்கமிடப்பட்ட உபஒழுங்குவிதி 2(அ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழிலர்களின் செயலிடங்கள், எஸ்ரிசிடபிள்யூ சமவாயம், ஏற்புடையற்பாலனவான ஒழுங்குவிதிகளும் நியமங்களும் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதனைச் சரிபார்ப்பதற்காக, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்கள் குழுவொன்றினால் வருடாந்தம் கணக்காய்வுசெய்யப்படுதல் வேண்டும்.”.

*(27)* அதன் 36(4) (அ) என்னும் ஒழுங்குவிதியில், "18 வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பதினாறு வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*(28)* அதன் 36 (5) ஆம் ஒழுங்குவிதியில், "கடலோடி 55 வயதுக்கு மேற்பட்டவராக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "கடலோடி பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராக அல்லது ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*(29)* ஒழுங்குவிதி 38 இல், அதன் ஒழுங்குவிதி (5) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய உபஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(6) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, கணக்காய்வுக்கு அமைந்தனவாக விருக்கவேண்டிய துறைகள், எஸ்ரிசிடயிள்யூ கோவையின் பிரிவு ஏ-1/16 இல் சுட்டிக்காட்டப்படுகின்றன.".

*(30)* ஒழுங்குவிதி 39 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"39. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இயைபான சர்வதேசக் கடல்சார் ஒழுங்கமைப்புத் தீர்மானங்களில் அடங்கியுள்ள ஏற்பாடுகளையும், விதப்புரைகளையும், வழிகாட்டுநெறிகளையும், பரீட்சைக்கான செயல்முறைக் கோவையிலான திருத்தங்களையும் நிலைநாட்டுவதற்கான விபரமான நடவடிக்கைமுறைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்ச நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களை வழங்கலாம்.".

*(31)* அதன் ஒழுங்குவிதி 41 இல்:-

(அ) "ஜிரி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"உயர் வோல்ட்டளவு" என்பது, 1000 வோல்ட்டுகளுக்கு விஞ்சுதலான மாறுபடுகின்ற மின்சக்தி (AC) அல்லது நேரடி மின்சக்தி (DC) எனப் பொருள்படும்;"

"ஐஜீஎவ் கோவை" என்பது, வாயுக்களை அல்லது வேறு குறைந்த பளிச்சீட்டுப்புள்ளி எரிபொருட்களைப் பயன்படுத்துகின்ற கப்பல்களுக்கான சர்வதேசக் காப்புக் கோவை எனப் பொருள்படும்;"

(ஆ) "பயணிக் கப்பல்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"முனைவுக் கோவை" என்பது, SOLAS ஒழுங்குவிதி XIV/1.1 இல் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்கான சர்வதேசக் கோவை எனப் பொருள்படும்;

"முனைவு நீர்ப்பரப்புகள்" என்பது, SOLAS ஒழுங்குவிதிகள் XIV/1.2 முதல் XIV/1.4 வரையானவற்றில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, வடதுருவ நீர்ப்பரப்புகள் அத்துடன்/அல்லது தென்துருவக் கடற்பரப்பு எனப் பொருள்படும்.".

EOG 10 - 0241

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.